www.tamilarangam.net


# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

பிரெஞ்சுப் பணியகம்


பாரிஸ்
25.12.99

திரு. ஆனந்தகுமார் இராஜரெட்ணம்

அன்புடையீர்,

இன்று போர்முனையில் தமிழர்களுக்குக் கிட்டிவரும் பெரும் வெற்றிகளை அறிந்திருப்பீர்கள். எமது போரணிகள் இன்று பலம் வாய்ந்த போரணிகளாக உருவாகி சிங்களப் படைகளை விரட்டியடிக்கும் பணியையாற்றி வருகின்றன. எமது தாயகம் மீட்கப்பட்டு வருகின்றது. எமது தேசியத்தலைவர் இதனை நிலமீட்புச் சமர் எனவும் விரைவில் தமிழீழம் உருவாகும் எனவும் தெளிவாக கூறியுள்ளார்.

ஒரு விடுதலையடைந்த மக்கள் சமூகமாக நாம் வாழும் நாள் தொலைவில் இல்லை.

இவ்வேளையில் போர்க்களத்தில் வெற்றிக் கொடிகளை நாட்டும் எமது போரணிகளைப் பலப்படுத்தவும் - எதிரி இராணுவம் மீள எமது மண்ணில் வரமுடியாதவாறு பாதுகாப்பு வழங்கவும் பெரும் பலம் தேவைப்படுகின்றது. இன்று தொடர்ந்து போர் நடப்பதால் பெருமளவிலான நிதித்தேவை ஏற்பட்டுள்ளது. இத் தேவைகள் விடுதலைப் போரை வென்றெடுக்க வேண்டிய இன்றைய சரித்திரக் கணங்களில் பூர்த்திசெய்யப்பட வேண்டும். தலைவரின் சிறப்பு மிக்க போர்த்திட்டங்கள் வெற்றிபெற இது அவசியமானது.

இதன் காரணமாக கிட்டம்மான் 2000 நிதியத்திற்கு நீங்கள் வழங்க முன்வந்த ....4000. பி. பிராங்குகளை எதிர்வரும் 16.01.00 அன்று இடம் பெறவுள்ள கேணல் கிட்டு நினைவெழுச்சி நிகழ்வும் ஓயாதஅலைகள் 3 போரெழுச்சி நிகழ்வும் இணைந்த எழுச்சிவிழாவில் வழங்குமாறு கேட்கின்றோம்.

உங்கள் பொருளாதார கடினங்கள் மத்தியில் ஒரு முக்கிய புனிதக் கடமையாய் இதனை பொறுப்பேற்று எழுச்சிவிழாவுக்கு வாருங்கள்.

நன்றி

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

**கோவை. எண்.:** ..4796........

பொறுப்பாளர்
நிதிப்பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்